## 39. உம் பிரசன்னத்தில் என் வாழ்க்கை

### பல்லவி

உம் பிரசன்னத்தில் என் வாழ்க்கை
வாழ வேண்டுமே
உம் சமூகத்தில் என் வாழ்க்கை
வளர வேண்டுமே

### அனுபல்லவி

*இதுவே எந்தன் உணவாகும்*
*இதுவே எந்தன் உயிர் மூச்சி*

### சரணங்கள்

1. சீனாய் மலையில் மோசேயின் மேல்
உமது மகிமையை இறங்கியதே
நாற்பது நாட்கள் இரவும் பகலும்
உமது மகிமை உணவானதே
- உம் பிரசன்னத்தில்

2. சாலமோன் கட்டிய ஆலயத்தில்
உமது மகிமை மூடியதே
ஆசாரியர்கள் நுழைய கூடாமல்
நிரம்பி இருந்த மகிமைபோல்
- உம் பிரசன்னத்தில்

3. ஏசய்யா கண்ட தரிசனத்தை
எனது கண்கள் காணணுமே
உமது வஸ்திர தொங்களினால்
எங்கள் ஆலயம் நிரம்பனுமே
- உம் பிரசன்னத்தில்